DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | : | **O.S :87/2015** | | |
| Deposition of Witness | | : | **வா.சா. 5** | | |
| Name | : | சரபோஜி | Occupation | : | விவசாயம் |
| Father's Name/ Husband | : | ஆறுமுகம் | | | |
| Village | : | நரசிம்மபுரம் | Age | : | 44 |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 23-01-2025

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன் . அதை படித்து பார்த்து கையெழுத்து செய்திருக்கிறேன் . என்னுடைய ஆதார் நகல் தாக்கல் செய்துள்ளேன்.

**4,13,14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தொழில் விவசாயம் . குத்தகை நிலங்களில் தான் விவசாயம் செய்கிறேன். நான் அகோபிலமடத்திற்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை குத்தகை விவசாயம் செய்து வருகிறேன் . 20 வருடமாக குத்தகை சாகுபடி செய்து வருகிறேன் . ஆர்.டி.ஆரில் என் பெயர் சாகுபடிதாரர் என்று பதிவு செய்யப்படவில்லை . குத்தகை சீட்டில் எனக்கும் அகோபில மடத்திற்கும் உள்ளது . புஞ்சை 3.1/2 ஏக்கர், நஞ்சை 1/2 ஏக்கர். 2000 ம் வரை என் அப்பா சாகுபடி செய்தார் . அதற்கு பின்னர் நான் சாகுபடி செய்து வருகிறேன் . 2000 த்திற்கு முன்னர் நான் என் அப்பாவுடன் போய் சாகுபடி செய்திருக்கிறேன். தஞ்சாவூர் மாவட்டம் காவேரி பாதுகாப்பு சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக இருந்தேன். அந்த பாதுகாப்பு சங்கம் பதிவு செய்யப்பட்டது . பதிவு எண் தெரியாது. அந்த சங்கம் காவேரி பாதுகாப்பு சங்கம் தான் . விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் இல்லை என்றால் ஆமாம் . நரசிம்மபுரம் கிராமம் சுவாமிமலையில் இருந்து ரோடு வழியாக வந்தால் 5 கிமீ தூரம். குறுக்கே வயல் வழியாக வந்தால் 3 கி.மீ தூரம். இந்த வழக்கில் சாட்சிமளிக்க நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வரவில்லை . இந்த வழக்கு யார் யார் மீது போடப்பட்டது என்றால் ஜெயலெட்சுமி குடும்ப வழக்கு என்று

சொன்னார்கள். அலவந்திபுரத்தில் இவர்கள் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்று தெரியாது. இவர்கள் குடும்பத்திற்கு எங்கெங்கு சொத்துக்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் அலவந்திபுரம் , சுவாமிமலை, திருவலஞ்சுழியில் உள்ளது. என்னை சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருக்கும் ஜெயலெட்சுமி தான் கூப்பிட்டார் . வாதி ராஜலெட்சுமிக்கு அலவந்திபுரத்தில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்று தெரியாது. நஞ்சை, புஞ்சை எவ்வளவு என்று தெரியாது. சொத்துக்கள் உள்ளது தெரியும். வீடு இருப்பது தெரியும். நஞ்சை நிலங்களில் தென்னை போட்டிருந்தார் . கொஞ்சம் நிலத்தில் நெல் சாகுபடி செய்திருந்தார் . என்ன ரகம் நெல் என்று தெரியாது . ராஜலெட்சுமி கணவருக்கு அலவந்திபுரத்தில் நிலங்கள் உள்ளது. நஞ்சையா, புஞ்சையா என்று தெரியாது. சுவாமிமலையில் புஞ்சை தான் பார்த்திருக்கிறேன். எவ்வளவு என்று தெரியாது. சுவாமிமலையில் புஞ்சை நிலத்தில் தென்னை , பாக்கு போட்டிருந்தார்கள். அதில் 3 மாத்திற்கு ஒரு முறை வெட்டுவார்கள் . எனக்கு அதில் என்ன வருமானம் வரும் என்று தெரியாது . நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சுவாமிமலை மற்றும் அலவந்திபுரத்தில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்கள் பற்றி தெரியும் என்று சொல்லியுள்ளேன். ஆனால் சுவாமிமலையில் புஞ்சை நிலங்கள் மட்டும் தான் உள்ளது என்றால் ஆமாம். நான் என்னுடைய குத்தகை நிலத்தில் 4 ஏக்கரிலும் நெல் போட்டிருக்கிறேன். 1009 ரகம் நெல். தற்போது 160 நாள் பயிராக அறுவடை செய்யும் நிலையில் உள்ளது. விதை நெல் ரூபாய் 1150/-க்கு 4 மூட்டை வாங்கினேன். போர் மற்றும் ஆத்து பாசனம் இரண்டும் உள்ளது . மின் இணைப்பு என் அப்பா பெயரில் உள்ளது. விதை போட்டது செப்டம்பர் மாதம் . அதில் இருந்து களை எடுப்பது உரம் எடுப்பது என்று ஆட்களை வைத்து பார்த்தேன் . ஒரு பெண்களாக இருந்தால் 200 ரூபாய், ஆண்களாக இருந்தால் 500 ரூபாய். விதை போட்டதில் இருந்து 100 நாட்கள் ஆட்களை வைத்து வேலை பார்த்திருக்கிறேன் . அவ்வாறு வேலை செய்யும் , ஒரு 30 பெண் ஆட்கள் வேலை பார்த்திருப்பார்கள் . நான் இந்த 100 நாட்களுக்கும் சேர்த்து மொத்ததில் 30 பெண் ஆட்கள் வேலை பார்த்திருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறேன். உரத்திற்கு பில் வாங்குவதில்லை. உரம் ஒரு 10,000/- ரூபாய்க்கு வாங்கியிருப்பேன். இயற்கை உரம் போடவில்லை . 1 ஏக்கருக்கு 60 கிலே வீதம் 40 மூட்டை கிடைக்கும். ஒரு கிலோ மோட்டாரகம் 22 ரூபாயும், சன்ன ரகம் 23.10 பைசாவிற்கும் விலை போகிறது . ஒரு மூட்டை 1350 ரூபாய்க்கு போகிறது .

அலவந்திபுரத்தில் உள்ள நஞ்சை நிலம் யார் யார் பெயரில் குடும்ப சொத்துகளாக இருக்கிறது என்று தெரியாது. குத்தகை நிலத்தில் 1 ஏக்கருக்கு செலவெள்ளாம் போக 15 ஆயிரத்தில் இருந்து 18 ஆயிரம் கிடைக்கும். அலவந்திபுரத்தில் உள்ள அந்த கூட்டு குடும்ப சொத்துக்களில் இரண்டு போகம் நெல் நடவு செய்தார்கள் . எந்தெந்த நிலத்தை யார் யார் கூட்டு குடும்ப சொத்தாக சாகுபடி செய்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது- 2005 இல் ஒரு முறை வெல்லம் வந்தது . எந்தெந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஒரு வருடம் பாதிக்கப்பட்டது . எந்த வருடம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது . விஜயலெட்சுமியின் அப்பா பெயர் நாகராஜன். நாகராஜனுக்கு மகன்கள் 6 பேர். அந்த 6 பேரும் தனித்தனியாக அலவந்திபுரத்தில் நிலங்களை சாகுபடி செய்கிறார்களா என்றால் செய்கிறார்கள். சுவாமிமலையில் உள்ள புஞ்சை நிலங்கள் யார் பெயரில் உள்ளது . யார் அனுபவித்து வருகிறார்கள் என்று தெரியாது . எனக்கு வாதிகள் யாரே என்றே தெரியாமல் அவர்கள் அடித்துக்கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . அலவந்திபுரத்தில் உள்ள நிலங்கள் அவரவர்கள் தனித்தனியாக சாகுபடி செய்து வருகிறார்கள் என்றாலும் நான் சொன்னது போல் இரண்டு போகம் சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல . நான் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6, 7 ஆம் பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.**

**10, 11, 18 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நிரூபண வாக்குமூலங்களில் உள்ள விவரங்களை பிரகாசம் தான் சொன்னார் . பிரகாசம் ராஜலெட்சுமியின் கணவர் . நான் என்னுடைய வாக்குமூலத்தில் எந்தெந்த பிரதிவாதிகளை தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் முதல் விசாரணை சாட்சியத்தில், நான் சாகுபடி செய்வது குத்தகை நிலம் என்று சொல்லவில்லை என்றால் சரி. எனக்கு குத்தகை அட்டை கொடுக்கவில்லை . விவசாய அட்டை கொடுத்துள்ளார்கள். எனக்கு சொந்தமாக நிலமே இல்லாத போது விவசாய அட்டை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . எனது சங்கத்தில் உறுப்பினராக இருப்பதை காண்பிக்க அட்டை கிடையாது. நான் சங்கத்தில் செயற்குழு

உறுப்பினராக இருப்பதாக என் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை . உரம் வாங்குவதற்கு விவசாய அட்டை இருந்தால் தான் வாங்க முடியும் என்றால் ஆதார் அட்டையை காண்பித்தே வாங்க முடியும் . சுசைட்டி மூலமாக வாங்க வேண்டும் என்றால் குத்தகை நிலத்தை காண்பித்து வாங்கினேன் . விவசாய அட்டையை காண்பித்தால் தான் சுசைட்டியில் உரம் கொடுப்பார்கள் என்றால் சரியல்ல . நான் தியாகசமுத்திரம் கிராமம் , நரசிம்ம புரத்தில் விவசாயம் செய்கிறேன் . நான் அந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை . நான் பிரகாசம் எழுதி கொடுத்ததில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல . நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் ஒரு மூட்டைக்கு 500 ரூபாய் வீதம் 40 மூட்டைக்கு 20,000/- ரூபாய் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறேன் . நான் விவசாயியோ, குத்தகை விவசாயியோ கிடையாது என்றாலும் அதனால் தான் எனக்கு குத்தகை விவசாய அட்டை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . கிராமத்தில் தலையாரியுடன் சென்று புள்ளி பார்ப்பார்கள் என்றால் அது என்ன என்று எனக்கு தெரியாது. அவ்வாறு எங்கள் கிராமத்தில் விசாரணை பணியாளர் இருக்கிறார்களா என்றால் அது யார் என்றே தெரியாது . கிராம விரிவாக்கம் பணியாளர் அடங்கல் கணக்கை எழுதும் போது , நான் சாகுபடி செய்யும் இடங்களுக்கு என் பெயர் எழுத பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது . அதை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.